ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2306/07 - 2022 නොවැම්බර් මස 14 වැනි සඳුදා - 2022.11.14

*2306/07 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்

***2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஏ பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

தென் மாகாண, உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணையாளரான ரணில் விக்கிரமசேகர ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66எ பிரிவின் கீழ் என்னிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாணத்தினுள் அமைந்துள்ள இங்கு கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் கீழ் பெயர் குறிப்பிடப்படும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான உப தவிசாளரை தேர்ந்தெடுக்கும் பணிக்கு 2022.10.26 ஆந் திகதியில் கூட்டப்பட்டு பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66இ(4) ஆம் பிரிவின் பிரகாரம் அட்டவணையின் கீழ் நேர் எதிரே காட்டப்பட்டுள்ள திகதியில் குறித்த நேரத்தில் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மீண்டும் கூடப்படும் என இத்தால் அறியத் தருகிறேன்.

**ரணில் விக்கிரமசேகர,**
உள்ளூராட்சி ஆணையாளர்,
தென் மாகாணம்.

6 ஆம் மாடி,
காலி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள,
தென் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில்,
2022, நவெம்பர் 14.

1A - G 34142 — 08 (2022/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| தொடர் இல. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்படும் பதவி | கூட்டப்படும் திகதி | கூட்டப்படும் நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பலாங்கொடை நகர சபை | கௌரவ உப தவிசாளர் | 2022.11.25 | மு. ப. 10.00 | அம்பலாங்கொடை நகர சபையின் பொது நூலகக் கட்டிடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள சபைக் கூட்ட மண்டபத்தின் (நகர சபையின் முன்னால் அமைந்துள்ள பிரதான நூலகத்தில்) |

EOG 11- 0135